LORDS TODAY - International Social Media & Magazine

LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Mar. 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS







LORDS CLUBS INTERNATIONAL




# LORDS TODAY




BHAGAVAD GITA




BIBLE




KURAN

2021- 16796675753


www.lordsclubs.com




# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்


### தொடர் 2




**BHAGAVAD GITA-Tamil**
**6 Page's**
தொடரும்.....




**BIBLE Tamil**
**6 Page's**
தொடரும்.....




**KURAN Tamil**
**6 Page's**
தொடரும்.....





உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம்.

அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com




पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनंजयः ।
पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः ॥१५॥


கண்ணன் பாஞ்சஜன்யத்தை யூதினான்; தேவ தத்தம் என்ற சங்கை தனஞ்ஜயன் ஒலித்தான்; அஞ்சுதற்குரிய செயல்களை யுடைய ஓநாய் வயிற்று வீமன் பௌண்ட்ரம் என்ற பெருஞ் சங்கை யூதினான். 15

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
नकुलः सहदेवश्च सुघोषमणिपुष्पकौ ॥ १६ ॥

குந்தி மகனாகிய யுதிஷ்டிர ராஜன் அநந்தவிஜயம் என்ற சங்கையும், நகுலனும் ஸஹதேவனும் (முறையே) ஸுகோஷம், மணிபுஷ்பகம் என்ற சங்குகளையும் ஊதினர். 16

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः ।
धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः ॥१७॥

வில்லாளிகளில் மிகச் சிறந்த காசிராஜனும், மஹாரதனாகிய சிகண்டியும், த்ருஷ்டத்யும்நனும், விராடனும், வெல்லப்படாத ஸாத்யகியும், 17




द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते ।
सौभद्रश्च महाबाहुः शङ्खान्दध्मुः पृथक्पृथक् ॥


துருபதனும் துரோபதை மக்களும், பெருந்
தோளுடையவனாகிய சுபத்திரை மகனும்,
தனித் தனியே தத்தம் சங்குகளை ஒலித்தனர்,
* பூமிக்குத் தலைவனே ! 18

स घोषो धार्तराष्ट्राणां
हृदयानि व्यदारयत् ।
नभश्च पृथिवीं चैव
तुमुलो व्यनुनादयन् ॥ १९ ॥

அந்தப் பெரு முழக்கம் வானையும் மண்ணை
யும் உடனொலிக்கச் செய்வதாய், த்ருதராஷ்
ட்ரக் கூட்டத்தாரின் நெஞ்சுகளைப் பிளந்
தது. 19

---

* இங்கு பூமிக்குத் தலைவனென்று திருத
ராஷ்ட்ரனை கதை சொல்லி வரும் ஸஞ்ஜயன்
விளிக்கிறான்.





अथ व्यवस्थितान्दृष्ट्वा
धार्तराष्ट्रान्कपिध्वजः ।
प्रवृत्ते शस्त्रसम्पाते
धनुरुद्यम्य पाण्डवः ॥ २० ॥

அப்பால், (இரு திறத்தும்) அம்புகள் பறக்கத் தலைப்பட்டன. அப்போது குரங்குக் கொடி யுயர்த்த பார்த்தன் த்ருதராஷ்ட்ரக் கூட்டத்தாரை நோக்கி வில்லை யேந்திக்கொண்டு, 20

हृषीकेशं तदा वाक्य-
मिदमाह महीपते ।
सेनयोरुभयोर्मध्ये रथं
स्थापय मेऽच्युत ॥ २१ ॥

கண்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான்: “அச்சுதா, படைக ளிரண்டுக்கும் நடுவே என் தேரைக் கொண்டு நிறுத்துக” என்று. (கேளாய், த்ருதராஷ்ட்ர ராஜனே!) 21




अर्जुन उवाच—


यावदेतान्निरीक्षेऽहं योद्धु-
कामानवस्थितान् ।
कैर्मया सह योद्धव्य-
मस्मिन्रणसमुद्यमे ॥ २२ ॥

அர்ஜுனன் சொல்லுகிறான்—

"சமரை விரும்பி நிற்கும் இவர்களை நான் பார்க்க வேண்டும். இந்தப் போர்த் தொடக்கத்தில் என்னோடு போர் செய்யக் கடவோர் யாவர்? 22

योत्स्यमानानवेक्षेऽहं
य एतेऽत्र समागताः ।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धे-
र्युद्धे प्रियचिकीर्षवः ॥ २३ ॥

கெட்ட மதி கொண்ட துர்யோதனனுக்குப் பிரீதி செய்யும் வண்ணம், இங்கு போர் செய்யத் திரண்டு நிற்போரை நான் காண வேண்டும்" என்றான். 23




सञ्जय उवाच—


एवमुक्तो हृषीकेशो
गुडाकेशेन भारत ।
सेनयोरुभयोर्मध्ये
स्थापयित्वा रथोत्तमम् ॥ २४ ॥

ஸஞ்ஜயன் சொல்லிக்கொண்டு வருகிறான்—

(கேளாய்) பாரத நாட்டரசே, இங்ஙனம் பார்த்தனுரைத்தது கேட்ட கண்ணன் மிகவும் மேன்மை கொண்ட அத்தேரை இரண்டு படைகளுக்கு மிடையே கொண்டு நிறுத்தினான். 24

भीष्मद्रोणप्रमुखतः
सर्वेषां च महीक्षिताम् ।
उवाच पार्थ पश्यैतान्
समवेतान्कुरूनिति ॥ २५ ॥

பீஷ்மனுக்கும் துரோணனுக்கும் மற்றெல்லா வேந்தருக்கு மெதிரே தேரை நிறுத்திக் கொண்டு:—"பார்த்தா! இங்கு கூடி நிற்கும் கௌரவரைப் பார்!" என்றான். 25




तत्रापश्यत्स्थितान्पार्थः पितॄनथ पितामहान् ।
आचार्यान्मातुलान्भ्रातॄन्पुत्रान्पौत्रान्सखींस्तथा

அங்கு பார்த்தன் தன்னுடைய தந்தையரும்,
பாட்டன்மாரும், குருக்களும், மாதுலரும், அண்
ணன் தம்பிகளும், மக்களும், பேரரும், தோழர்
களும் நிற்பது கண்டான். 26

श्वशुरान्सुहृदश्चैव सेनयोरुभयोरपि ।
तान्समीक्ष्य स कौन्तेयः सर्वान्बन्धूनवस्थितान्

அங்ஙனமே மாமன்மாரும், நண்பர்களும், உற
வினரெல்லாரும் இரண்டு படைகளிலும் நிற்கக்
கண்டு, குந்தி மகனாகிய அப் பார்த்தன்— 27


कृपया परयाऽऽविष्टो विषीदन्निदमब्रवीत् ।
दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम् ॥२८॥

மிகவும் இரக்க முற்றவனாய்த் துயருடன்
சொல்லுகிறான்: “கண்ணா, போர் செய்ய
வேண்டி இங்கு திரண்டு நிற்கும் சுற்றத்தார்
களைக் கண்டு, 28

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்




### தொடக்கநூல் அதிகாரம் 3

1 ஆண்டவராகிய கடவுள் உருவாக்கிய காட்டு விலங்குகளிலெல்லாம் பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது. அது பெண்ணிடம், கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா? என்று கேட்டது.

2 பெண் பாம்பிடம், தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம்.

3 ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது; அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள்; என்று கடவுள் சொன்னார் , என்றாள்.

4 பாம்பு பெண்ணிடம், நீங்கள் சாகவே மாட்டீர்கள்;

5 ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்; என்றது.

6 அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்ப+ட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான்.

7 அப்பொழுது அவர்கள் இருவரின் கண்களும் திறக்கப்பட்டன; அவர்கள் தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்தனர். ஆகவே, அத்தி இலைகளைத் தைத்துத் தங்களுக்கு ஆடைகளைச் செய்துகொண்டனர்.

8 மென்காற்று வீசிய பொழுதினிலே, தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலவிக்கொண்டிருந்த ஓசை கேட்டு, மனிதனும் அவன் மனைவியும் ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிருந்து விலகி, தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டனர்.

# BIBLE




9 ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கின்றாய்? என்று கேட்டார்.

10 உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன் என்றான் மனிதன்.

11 நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ? என்று கேட்டார்.

12 அப்பொழுது அவன், என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் உண்டேன் என்றான்.

13 ஆண்டவராகிய கடவுள், நீ ஏன் இவ்வாறு செய்தாய்? என்று பெண்ணைக் கேட்க, அதற்குப் பெண், பாம்பு என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன் என்றாள்.

14 ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம், நீ இவ்வாறு செய்ததால், கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய்.

15 உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய் என்றார்.

16 அவர் பெண்ணிடம் உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்; வேதனையில் நீ குழந்தைகள் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய்; அவனோ உன்னை ஆள்வான் என்றார்.

# BIBLE




17 அவர் மனிதனிடம், உன் மனைவியின் சொல்லைக் கேட்டு,
உண்ணக்கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய
மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம்
சபிக்கப்பட்டுள்ளது; உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை
உழைத்து நீ உண்பாய்.

18 முட்செடியையும் முட்புதரையும் உனக்கு அது முளைப்பிக்கும். வயல்
வெளிப் பயிர்களை நீ உண்பாய்.

19 நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை
நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்.
நீ மண்ணாய் இருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய் என்றார்.

20 மனிதன் தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டாள்; ஏனெனில்
உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய்.


21 ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல்
ஆடைகள் செய்து அவர்கள் அணியச் செய்தார்.

22 பின்பு ஆண்டவராகிய கடவுள், மனிதன் இப்பொழுது நம்முள்
ஒருவர் போல் நன்மை தீமை அறிந்தவன் ஆகிவிட்டான். இனி அவன்
என்றென்றும் வாழ்வதற்காக, வாழ்வின் மரத்திலிருந்தும் பறித்து
உண்ணக் கையை நீட்டிவிடக் கூடாது என்றார்.

23 எனவே ஆண்டவராகிய கடவுள் அவன் உருவாக்கப்பட்ட அதே
மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து
வெளியே அனுப்பி விட்டார்.

24 இவ்வாறாக, அவர் மனிதனை வெளியே துரத்திவிட்டார். ஏதேன்
தோட்டத்திற்குக் கிழக்கே வாழ்வின் மரத்திற்குச் செல்லும் வழியைக்
காப்பதற்குக் கெருபுகளையும் சுற்றிச் சுழலும் சுடரொளி வாளையும்
வைத்தார்.

# BIBLE




## தொடக்கநூல் அதிகாரம் 4

1 ஆதாம் தன் மனைவி ஏவாளுடன் கூடி வாழ்ந்தான். அவள் கருவுற்றுக் காயினைப் பெற்றெடுத்தாள். அவள் ;ஆண்டவர் அருளால் ஆண் மகன் ஒருவனை நான் பெற்றுள்ளேன் என்றாள்.

2 பின்பு அவள் அவன் சகோதரன் ஆபேலைப் பெற்றெடுத்தாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயின் நிலத்தைப் பண்படுத்துபவன் ஆனான்.

3 சில நாள்கள் சென்றன. காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்குக் காணிக்கை கொண்டு வந்தான்.

4 ஆபேலும் தன் மந்தையிலிருந்து கொழுத்த தலையீறுகளைக் கொண்டு வந்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார்.


5 ஆனால் காயினையும் அவன் காணிக்கையையும் அவர் கனிவுடன் கண்ணோக்கவில்லை. ஆகவே, காயின் கடுஞ்சினமுற்றான். அவன் முகம் வாடியது.

6 ஆகவே, ஆண்டவர் காயினிடம், நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடி இருப்பது ஏன்?

7 நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடங்கி ஆளவேண்டும் என்றார்.

8 காயின் தன் சகோதரன் ஆபேலிடம், நாம் வயல்வெளிக்குப் போவோம் என்றான். அவர்கள் வெளியில் இருந்தபொழுது, காயின் தன் சகோதரன் ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றான்.

# BIBLE




9 ஆண்டவர் காயினிடம், உன் சகோதரன் ஆபேல் எங்கே? என்று கேட்டார். அதற்கு அவன், எனக்குத் தெரியாது. நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியோ? என்றான்.

10 அதற்கு ஆண்டவர், நீ என்ன செய்துவிட்டாய்! உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது.

11 இப்பொழுது, உன் கைகள் சிந்திய உன் சகோதரனின் இரத்தத்தைத் தன் வாய்திறந்து குடித்த மண்ணை முன்னிட்டு, நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.

12 நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்குப் பலன் தராது. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய் என்றார்.


13 காயின் ஆண்டவரிடம், எனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்னால் தாங்க முடியாததாக இருக்கின்றது.

14 இன்று நீர் என்னை இம்மண்ணிலிருந்து துரத்தியிருக்கின்றீர்; உமது முன்னிலையினின்று நான் மறைக்கப்பட்டுள்ளேன். மண்ணுலகில் நான் நாடோடியாக அலைந்து திரிய வேண்டியுள்ளது. என்னைக் காண்கின்ற எவனும் என்னைக் கொல்வானே! என்றான்.

15 ஆண்டவர் அவனிடம் அப்படியன்று; காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழி வாங்கப்படுவான் என்று சொல்லி, காயினைக் கண்டு பிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்.

16 பின்னர் காயின் ஆண்டவர் திருமுன்னை விட்டுச் சென்று ஏதேனுக்குக் கிழக்கே இருந்த நோது நாட்டில் குடியேறினான்.

# BIBLE




17 காயின் தன் மனைவியுடன் கூடி வாழ, அவளும் கருவுற்று ஏனோக்கைப் பெற்றெடுத்தாள். அப்பொழுது காயின் ஒரு நகரத்தை நிறுவி, அதற்குத் தன் மகன் ஏனோக்கின் பெயரை வைத்தான்.

18 ஏனோக்கிற்கு ஈராது பிறந்தான்.ஈராதுக்கு மெகுயாவேல் பிறந்தான். மெகுயாவேலுக்கு மெத்துசாவேல் பிறந்தான். மெத்துசாவேலுக்கு இலாமேக்கு பிறந்தான்.

19 இலாமேக்கு இரு பெண்களை மணந்துகொண்டான். ஒருத்தியின் பெயர் ஆதா; மற்றொருத்தியின் பெயர் சில்லா.

20 ஆதா யாபாலைப் பெற்றெடுத்தாள். இவன்தான் ஆடுமாடு மேய்த்துக் கூடாரத்தில் வாழும் மக்களின் தந்தை.

21 அவன் சகோதரன் பெயர் யூபால். இவன்தான் யாழ் மீட்டுவோர், குழல் ஊதுவோர் ஆகியோர் அனைவரின் தந்தை.

22 சில்லா தூபால்காயினைப் பெற்றெடுத்தாள். இவன் வெண்கலத்தாலும், இரும்பாலும் எல்லாவிதமான கருவிகள் செய்யும் கொல்லன் ஆனான். தூபால்காயினுக்கு நாகமா என்ற சகோதரி இருந்தாள்.

23 இலாமேக்கு தன் மனைவியரிடம், ஆதா, சில்லா, நான் சொல்வதைக் கவனியுங்கள். இலாமேக்கின் மனைவியரே, என் சொல்லுக்குச் செவிகொடுங்கள்; என்னைக் காயப்படுத்தியதற்காக ஒருவனை நான் கொன்று விட்டேன்; என்னை அடித்ததற்காக அந்த இளைஞனை நான் கொன்றேன்.

24 காயினுக்காக ஏழுமுறை பழிவாங்கப்பட்டால் இலாமேக்கிற்காக எழுபது ஏழுமுறை பழிவாங்கப்படும் என்றான்.


25 ஆதாம் மீண்டும் தன் மனைவியுடன் கூடி வாழ, அவளும் மகன் ஒருவனைப் பெற்று அவனுக்குச் சேத்து என்று பெயரிட்டாள். காயின் ஆபேலைக் கொன்றதால் அவனுடைய இடத்தில் இன்னொருவனைக் கடவுள் வைத்தருளினார் என்றாள்.

26 சேத்துக்கும் மகன் ஒருவன் பிறந்தான்; அவனுக்கு அவன் ஏனோசு என்று பெயரிட்டான். அப்பொழுதே ; ஆண்டவர் என்னும் திருப்பெயரால் அவரை வழிபடலாயினர்.

தொடரும்.....

# KURAN

## மெகா தொடர்





2:33. "ஆதமே! அப் பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு விவரிப்பீராக!" என்று (இறைவன்) சொன்னான்; அவர் அப்பெயர்களை அவர்களுக்கு விவரித்தபோது "நிச்சயமாக நான் வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை அறிவேன் என்றும், நீங்கள் வெளிப்படுத்துவதையும், நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன் என்றும் உங்களிடம் நான் சொல்லவில்லையா?" என்று (இறைவன்) கூறினான்.

2:34 وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ أَبَىٰ وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ

2:34. பின்னர் நாம் மலக்குகளை நோக்கி, "ஆதமுக்குப் பணிந்து ஸுஜூது செய்யுங்கள்" என்று சொன்னபோது இப்லீஸைத்தவிர மற்ற அனைவரும் சிரம் பணிந்தனர்; அவன்(இப்லீஸு) மறுத்தான்; ஆணவமும் கொண்டான்; இன்னும் அவன் காஃபிர்களைச் சார்ந்தவனாகி விட்டான்.

2:35 وَقُلْنَا يَا آدَمُ اسْكُنْ أَنتَ وَزَوْجُكَ الْجَنَّةَ وَكُلَا مِنْهَا رَغَدًا حَيْثُ شِئْتُمَا وَلَا تَقْرَبَا هَٰذِهِ
الشَّجَرَةَ فَتَكُونَا مِنَ الظَّالِمِينَ

2:35. மேலும் நாம், "ஆதமே! நீரும் உம் மனைவியும் அச்சுவனபதியில் குடியிருங்கள். மேலும் நீங்கள் இருவரும் விரும்பியவாறு அதிலிருந்து தாராளமாக புசியுங்கள்; ஆனால் நீங்கள் இருவரும் இம்மரத்தை மட்டும் நெருங்க வேண்டாம்; (அப்படிச் செய்தீர்களானால்) நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களில் நின்றும் ஆகிவிடுவீர்கள்" என்று சொன்னோம்.




2:36 وقلنا اهبطوا بعضكم لبعض عدو □ فأزلهما الشيطان عنها فأخرجهما مما كانا فيه
ولكم في الأرض مستقر ومتاع إلى حين


2:36. இதன்பின், ஷைத்தான் அவர்கள் இருவரையும் அதிலிருந்து வழி தவறச் செய்தான்; அவர்கள் இருவரும் இருந்த(சொர்க்கத்)திலிருந்து வெளியேறுமாறு செய்தான்; இன்னும் நாம், "நீங்கள் (யாவரும் இங்கிருந்து) இறங்குங்கள்; உங்களில் சிலர் சிலருக்கு பகைவராக இருப்பீர்கள்; பூமியில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உங்களுக்குத் தங்குமிடமும் அனுபவிக்கும் பொருள்களும் உண்டு" என்று கூறினோம்.

2:37 إنه هو التواب الرحيم فتلقى آدم من ربه كلمات فتاب عليه

2:37. பின்னர் ஆதம் தம் இறைவனிடமிருந்து சில வாக்குகளைக் கற்றுக் கொண்டார்; (இன்னும், அவற்றின் மூலமாக இறைவனிடம் மன்னிப்புக்கோரினார்;) எனவே இறைவன் அவரை மன்னித்தான்; நிச்சயமாக அவன் மிக மன்னிப்போனும், கருணையாளனும் ஆவான்.

2:38 فإما يأتينكم مني هدى فمن تبع هداي فلا خوف عليهم ولا هم قلنا اهبطوا منها جميعا
يحزنون

2:38. (பின்பு, நாம் சொன்னோம் "நீங்கள் அனைவரும் இவ்விடத்தை விட்டும் இறங்கிவிடுங்கள்; என்னிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக நல்வழி(யைக் காட்டும் அறிவுரைகள்) வரும்போது, யார் என்னுடைய (அவ்) வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எத்தகைய




பயமும் இல்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்."

2:39 وَالَّذِينَ كَفَرُوا وَكَذَّبُوا بِآيَاتِنَا أُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ ۖ هُمْ فِيهَا خَالِدُونَ

2:39. அன்றி யார் (இதை ஏற்க) மறுத்து, நம் அத்தாட்சிகளை பொய்ப்பிக்க முற்படுகிறார்களோ அவர்கள் நரக வாசிகள்; அவர்கள் அ(ந் நரகத்)தில் என்றென்றும் தங்கி இருப்பர்.

2:40 يَا بَنِي إِسْرَائِيلَ اذْكُرُوا نِعْمَتِيَ الَّتِي أَنْعَمْتُ عَلَيْكُمْ وَأَوْفُوا بِعَهْدِي أُوفِ بِعَهْدِكُمْ وَإِيَّايَ فَارْهَبُونِ


2:40. இஸ்ராயீலின் சந்ததியினரே! நான் உங்களுக்கு அளித்த என்னுடைய அருட்கொடையை நினைவு கூறுங்கள்; நீங்கள் என் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்; நான் உங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவேன்; மேலும், நீங்கள் (வேறெவருக்கும் அஞ்சாது) எனக்கே அஞ்சுவீர்களாக.

2:41 وَآمِنُوا بِمَا أَنْزَلْتُ مُصَدِّقًا لِمَا مَعَكُمْ وَلَا تَكُونُوا أَوَّلَ كَافِرٍ بِهِ ۖ وَلَا تَشْتَرُوا بِآيَاتِي ثَمَنًا قَلِيلًا وَإِيَّايَ فَاتَّقُونِ

2:41. இன்னும் நான் இறக்கிய(வேதத்)தை நம்புங்கள்; இது உங்களிடம் உள்ள (வேதத்)தை மெய்ப்பிக்கின்றது; நீங்கள் அதை (ஏற்க) மறுப்பவர்களில் முதன்மையானவர்களாக வேண்டாம். மேலும் என் திரு வசனங்களைச் சொற்ப விலைக்கு விற்று விடாதீர்கள்; இன்னும் எனக்கே நீங்கள் அஞ்சி(ஒழுகி) வருவீர்களாக.

2:42 وَلَا تَلْبِسُوا الْحَقَّ بِالْبَاطِلِ وَتَكْتُمُوا الْحَقَّ وَأَنْتُمْ تَعْلَمُونَ

2:42. நீங்கள் அறிந்து கொண்டே உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள்; உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள்.




2:43 وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ

2:43. தொழுகையைக் கடைப் பிடியுங்கள்; ஜகாத்தையும் (ஒழுங்காகக்) கொடுத்து வாருங்கள் ருகூஃ செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்.

2:44 اَتَاْمُرُوْنَ النَّاسَ بِالْبِرِّ وَتَنْسَوْنَ اَنْفُسَكُمْ وَاَنْتُمْ تَتْلُوْنَ الْكِتٰبَ اَفَلَا تَعْقِلُوْنَ

2:44. நீங்கள் வேதத்தையும் ஓதிக் கொண்டே, (மற்ற) மனிதர்களை நன்மை செய்யுமாறு ஏவி, தங்களையே மறந்து விடுகிறீர்களா? நீங்கள் சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டாமா?

2:45 وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ


2:45. மேலும் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக்கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள்; எனினும், நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோர்க்கன்றி மற்றவர்களுக்குப் பெரும் பாரமாகவேயிருக்கும்.

2:46 الَّذِيْنَ يَظُنُّوْنَ اَنَّهُمْ مُّلٰقُوْا رَبِّهِمْ وَاَنَّهُمْ اِلَيْهِ رٰجِعُوْنَ

2:46. (உள்ளச்ச(முடைய) அவர்கள்தாம், "திடமாக (தாம்) தங்கள் இறைவனைச் சந்திப்போம்; நிச்சயமாக அவனிடமே தாம் திரும்பச்செல்வோம்" என்பதை உறுதியாகக் கருத்தில் கொண்டோராவார்.

2:47 يٰبَنِىْٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِىَ الَّتِىْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ وَاَنِّىْ فَضَّلْتُكُمْ عَلَى الْعٰلَمِيْنَ

2:47. இஸ்ராயீல் மக்களே! (முன்னர்) நான் உங்களுக்கு அளித்த என்னுடைய அருட் கொடையையும், உலகோர் யாவரையும் விட உங்களை மேன்மைப்படுத்தினேன் என்பதையும் நினைவு கூறுங்கள்.




2:48 وَاتَّقُوا يَوْمًا لَا تَجْزِي نَفْسٌ عَنْ نَفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا شَفَاعَةٌ وَلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ
وَلَا هُمْ يُنْصَرُونَ

2:48. இன்னும், ஓர் ஆத்மா மற்றோர் ஆத்மாவிற்கு சிறிதும் பயன்பட முடியாதே (அந்த) ஒரு நாளை நீங்கள் அஞ்சி நடப்பீர்களாக! (அந்த நாளில்) எந்தப் பரிந்துரையும் அதற்காக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது; அதற்காக எந்தப் பதிலீடும் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது; அன்றியும் (பாவம் செய்த) அவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.

2:49 وَإِذْ نَجَّيْنَاكُمْ مِنْ آلِ فِرْعَوْنَ يَسُومُونَكُمْ سُوءَ الْعَذَابِ يُذَبِّحُونَ أَبْنَاءَكُمْ وَيَسْتَحْيُونَ نِسَاءَكُمْ
وَفِي ذَٰلِكُمْ بَلَاءٌ مِنْ رَبِّكُمْ عَظِيمٌ

2:49. உங்களை கடுமையாக வேதனைப்படுத்தி வந்த ஃபிர்அவ்னின் கூட்டத்தாரிடமிருந்து உங்களை நாம் விடுவித்ததையும் (நினைவு கூறுங்கள்); அவர்கள் உங்கள் ஆண் மக்களை கொன்று, உங்கள் பெண்மக்களை (மட்டும்) வாழவிட்டிருந்தார்கள்; அதில் உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து ஒரு பெரும் சோதனை இருந்தது.

2:50 وَإِذْ فَرَقْنَا بِكُمُ الْبَحْرَ فَأَنْجَيْنَاكُمْ وَأَغْرَقْنَا آلَ فِرْعَوْنَ وَأَنْتُمْ تَنْظُرُونَ

2:50. மேலும் உங்களுக்காக நாம் கடலைப்பிளந்து, உங்களை நாம் காப்பாற்றி, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை அதில் மூழ்கடித்தோம்(என்பதையும் நினைவு கூறுங்கள்).

2:51 وَإِذْ وَاعَدْنَا مُوسَىٰ أَرْبَعِينَ لَيْلَةً ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْ بَعْدِهِ وَأَنْتُمْ ظَالِمُونَ

2:51. மேலும் நாம் மூஸாவுக்கு வேதம் அருள நாற்பது இரவுகளை வாக்களித்தோம்; (அதற்காக அவர் சென்ற) பின்னர் காளைக்கன்று ஒன்றைக் (கடவுளாக) எடுத்துக் கொண்டீர்கள்; (அதனால்) நீங்கள் அக்கிரமக்காரர்களாகி விட்டீர்கள்.

2:52 ثم عفونا عنكم من بعد ذلك لعلكم تشكرون

2:52. இதன் பின்னரும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காக நாம் உங்களை மன்னித்தோம்.

2:53 والفرقان لعلكم تهتدون وإذ آتينا موسى الكتب

2:53. இன்னும், நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டு நாம் மூஸாவுக்கு வேதத்தையும் (நன்மை தீமைகளைப் பிரித்து அறிவிக்கக்கூடிய) ஃபுர்க்கானையும் அளித்தோம் (என்பதையும் நினைவு கூறுங்கள்).

2:54 قوم إنكم ظلمتم أنفسكم باتخاذكم العجل فتوبوا إلى بارئكم وإذ قال موسى لقومه يـ
إنه هو التواب الرحيم فاقتلوا أنفسكم ذلكم خير لكم عند بارئكم فتاب عليكم

2:54. மூஸா தம் சமூகத்தாரை நோக்கி; "என் சமூகத்தாரே! நீங்கள் காளைக் கன்றை(வணக்கத்திற்காக) எடுத்துக் கொண்டதன் மூலம் உங்களுக்கு நீங்களே அக்கிரமம் செய்து கொண்டீர்கள்; ஆகவே, உங்களைப் படைத்தவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள்; உங்களை நீங்களே மாய்த்துக் கொள்ளுங்கள்; அதுவே உங்களைப் படைத்தவனிடம், உங்களுக்கு நற்பலன் அளிப்பதாகும்" எனக் கூறினார். (அவ்வாறே நீங்கள் செய்ததனால்) அவன் உங்களை மன்னித்தான் (என்பதையும் நினைவு கூறுங்கள்.)

தொடரும்.....




திமுக மற்றும் அஇஅதிமுக போட்டியிடும் அனைத்து தொகுதியிலும் மதரீதியான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இரு கட்சிகளுமே தனித்தனியே கிருஸ்தவர்களுக்கு இருபது தொகுதியும் இஸ்லாமியர்களுக்கு இருபது தொகுதியும் ஏன் தொகுதி ஒதுக்கி கொடுக்கவில்லை? இந்தியர்களான கிருஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் பிரச்சனைகளை அவர்கள் தரப்பில் இருந்து எடுத்துக் கூறுவதற்கு ஆள் இல்லாமல் சட்டசபையில் எப்படி முன்னெடுத்து கொண்டுசெல்ல முடியும்? திமுகவும் அஇஅதிமுக வும் இரு கட்சிகளுமே மதவாத கட்சிகள்தான் என்று இவர்களின் தொகுதி ஒதுக்கீட்டின் மூலமாக இம்முறை தேர்தலிலும் நிரூபித்துவிட்டார்கள்.பாஜகவை மதவாத கட்சி என்று கூறிக்கொள்ள இந்த இரண்டு கட்சிகளுக்குமே எந்த ஒரு தகுதியுமே கிடையவே கிடையாது. கிருஸ்தவ மக்களும் இஸ்லாமிய மக்களும் இம்முறை இவ்விரண்டு கட்சிகளுக்குமே ஓட்டு போட மாட்டார்கள் என்று இதன்மூலம் தெரியவருகின்றது.........

மேலும் இவர்கள் அனைத்து தொகுதிகளிலும் பல தலைமுறைக்கு மேல் சொத்து குவித்து வைத்துள்ள தொழில் அதிபர்களை மட்டும்தான் மீண்டும் மீண்டும் ஊழல் செய்வதற்காக திட்டமிட்டு களம் இறங்கி உள்ளார்கள் என்பது 100 சதவிகிதம் உண்மையாகும். ஒரே ஒரு ஏழைக்கு கூட இவர்கள் தொகுதி ஒதுக்கி கொடுக்கவில்லை.ஒரு சட்டசபை உறுப்பினரின் மாத வருமானம் அதிகபட்சமாக ஒரு லட்சம் ரூபாய்தான் அது ஒரு ஏழைக்கு கிடைத்தால் அந்த ஏழை வேட்பாளருக்கு அதிக தொகையாக அவர் உணர்ந்து அந்த பணத்திலேயே மிகச் சிறப்பாக தன் பணியைச் செய்வார்.ஆனால் தற்போது இரு கட்சிகளின் வேட்பாளர்களுக்குமே ஒருலட்சம் ரூபாய் என்பது ஒரு சிறு தூசிபோன்றுதான் இவர்களுக்கு.ஆனால் அன்று காமராஜர் மற்றும் கர்கன் போன்றவர்கள் மாத ஊதியம் அவர்களுக்கு நிறைவாக இருந்த ஒரே காரணத்திற்காக மட்டுமே அவர்களால் நேர்மையுடன் ஊழல் இன்றி தங்களின் முதல் அமைச்சர் பதவியையும், காவல்துறை அமைச்சர் பதவியையும் மிகவும் சிறப்பாக பணியாற்றி தங்களின் கடமையைச் செய்தார்கள்.ஆனால் திமுக மற்றும் அஇஅதிமுக வில் போட்டியிடும் ஒரே ஒரு நபர்கள்கூட அப்படி ஒரு ஏழ்மையானவர்களும் நேர்மையானவர்களும் கிடையவே கிடையாது.

இம்முறை போட்டியிடும் அனைத்து தொழில் அதிபர்களும் வெற்றிபெற்றால் மாத ஊதிய அடிப்படையில் மக்களுக்கான பணியாற்றாமல் ஊழல் அடிப்படையில் மட்டுமே வழக்கம்போல் அதிக பணம் எதிர்பார்த்து பணியாற்றுவார்கள். ஆகவே அனைத்து பொதுமக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒற்றுமையுடன் ஏழ்மையானவர்களுக்கு மட்டும் ஊதிய அடிப்படையில் மக்கள் பணியாற்ற உள்ள நேர்மையான வேட்பாளர்களை அனைத்து தொகுதிகளிலும் கண்டறிந்து உங்களின் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புடைய ஒவ்வொரு வாக்குகளையும் ஏழ்மையான வேட்பாளர்களுக்கு தானமாக வாக்களித்து அவர்களை வெற்றிபெறச் செய்யவேண்டுமென அன்புடன் இரு கரங்கள் கூப்பி வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

2021 தேர்தலில் லாபநோக்குடன் பல ஆயிரம்கோடி ரூபாய்க்கு மேல் செலவிடும் ஊழல் தலைவர்களை தொலைகாட்சி தொடர் விளம்பரங்களிலும் அச்சடிக்கப்படும் காகிதத்திலும் மட்டுமே தேடாதீர்கள் உங்களில் ஒருவரை உங்களுக்காக தொண்டு செய்யும் ஏழ்மையும் நேர்மையும் உள்ள என் போன்ற சேவை செய்யும் நேர்மையான உங்களின் ஊழியர்கள் யார்? யார்? என்று நீங்கள் அனைவரும் தேடி சென்று. அவர்களுக்கு வாக்களியுங்கள். தேர்தல் சமயங்களில் மட்டும் ஒரே ஒரு முறை மட்டுமே உங்களிடம் ஓட்டு சேகரிப்பதற்காக உங்களைத் தேடிவரும் ஊழல்வாதிகளுக்கு வாக்குகள் அளித்து விலைவாசிகள் உயர்த்தப்பட்டு உங்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் வழக்கம் போல் இழந்து என்றுமே ஏழையாய் நிற்காதீர்கள். இனி ஏழைகளின் ஓட்டு ஏழைகளுக்கானதாக மட்டுமே இருக்கட்டும்.........

ஏழைகளின் முன்னேற்றத்திற்கானதாய் இருக்கட்டும். ஆகவே ஏழைகள் அனைவரும் ஒன்று கூடி ஏழைகளை மட்டுமே தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்வோம். வாழ்க ஏழைமக்களின் ஜனநாயகம்... ஒழிக அதிகார திமிர்பிடித்த ஊழல் பணநாயகம்...
அன்புடன் உங்கள் தலைமை சமூகசேவகர் ம.பால்ராஜ் **LORDS CLUBS INTERNATIONAL**




# உலகிற்கே சவால் விடும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் பால்ராஜ்

## மக்கள் தொகையில் மட்டுமே முன்னேற்றம் அடைந்த நம் இந்தியா பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதன் காரணம் என்ன?

என்கின்ற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு கேள்வியை உருவாக்கி இதற்கு சரியான பதிலையும் கண்டறிந்து வைத்துக் கொண்டு இவரது டிவிட்டர், முகநூல், வாட்ஸ்அப் குரூப்களுக்கும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கேள்வி எழுப்பி வருகின்றார்.
இதற்கு உலகம் முழுவதிலும் இருந்து பொதுமக்களில் ஒரே ஒரு நபர் கூட சரியான பதில் அளிக்கவில்லை என்று தினமும் வருத்தம் தெரிவித்து வருகின்றார்.

ஒட்டு மொத்த இந்தியர்களுக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மிகவும் தேவையான இவரின் இந்த முக்கியக் கேள்விக்கு பொதுமக்களில் யாரும் பதில் அளிக்கத் தெரியாததனால் இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த கேள்விக்குத் தகுந்த பதில் தெரிகின்றதா என்று பார்ப்போம் என்று இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் இந்த அறிக்கையின் மூலமாக அறிக்கை விடுகின்றார். இந்தியாவில் உள்ள கட்சித் தலைவர்களில் யாரேனும் ஒருவராவது இதற்கு சரியான பதில் அளித்து விட்டால் அந்தக் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமே வரும் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக தேர்தலில் போட்டியிடத் தகுதி உடையவர்கள் என்றும் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் கூறுகின்றார்.

இந்தக் கேள்விக்கு உண்டான பதிலைக் கூறும் கட்சித் தலைவர்கள் மட்டும் தான் முதல்வர் வேட்பாளர் தேர்தலுக்கு உறுதிமொழி வாசித்து தேர்தலில் போட்டியிட தகுதி உடையவர்கள் அப்போதுதான் இந்த வேட்பாளர்களால் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லமுடியும் என்று தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு கோரிக்கை விடுகின்றார்.

தேர்தல் ஆணையம் இதை ஏற்குமா? அல்லது அறிவுடைய அரசியல் தலைவர்கள் இவரது கேள்விக்கு பதில் அளித்து தேர்தலில் போட்டியிட தயார் என்று சர்வதசே தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் கேட்கும் கேள்விக்கு ஒற்றை பதிலை கூறிவிட்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பொதுமக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச்செய்வார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**LORDS CLUBS INTERNATIONAL**
**சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்**
**Head Quarters : INDIA**

**LIONS CLUBS INTERNATIONAL**
**சர்வதேச அரிமாக்கள் சங்கங்கள்**
**Head Quarters : AMERICA**

**ROTARY CLUBS INTERNATIONAL**
**சர்வதேச ரோட்டரி சங்கங்கள்**
**Head Quarters : UNITED KINGDOM**




லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

அயல்நாட்டு கிளப்புகளான லயன்ஸ் ரோட்டரி போன்ற சர்வதேச கிளப்புகளில் இந்தியாவில் உள்ள உறுப்பினர்கள் இந்தியர்களின் காலாச்சாரத்தை சீரழிக்கும் வகையில் ஒன்று கூடி வரம்பு மீறிய மது அருந்துதல் அவர்களின் குடும்பத்தாருடன் கலந்துகொள்ளும் அனைத்து பொதுக்கூட்டங்களிலும் புகுத்துகின்றனர்.

இதனால் அதிக மதுபோதையில் தாம் என்ன செய்கின்றோம் என்று தன்னையும் அறியாமல் வரம்பு மீறி மாற்றான் மனைவியை கூட தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் தவறான எண்ணமும் சிலருக்கு ஏற்படுகின்றது. இதனால் சிலரின் மனைவியை அவர்களின் கணவரை விட்டு பிரித்து வசப்படுத்தி கள்ளத்தனமாய் இழுத்துக் கொண்டு ஓடியும் விடுகின்றனர்.

மேலும் சிலர் இந்தியாவில் இருந்து அயல்நாடுகளுக்குச் சுற்றுலா சென்று அங்குள்ள அயல்நாட்டுப் பாலியல் தொழில் செய்யும் பெண்களுடன் தவறாக உல்லாசம் கண்டு அவர்களிடமிருந்து எச்ஐவி போன்ற பல்வேறு பால்வினை நோய் தாக்குதலுக்கும் ஆளாகியும் நோயுடன் நம் இந்தியாவிற்கு நாடு திரும்புவதும் உண்டு.

அதிக மது அருந்தி தவறான பாதையில் செல்லும் இவர்களால் ஆரோக்கியத்துடனும் நீண்டகால ஆயுளுடனும் வாழ முடிவதில்லை. இது ஒருபுறம் இருக்க மாற்றொரு புறம் நம் இந்தியாவின் பணத்தை அயல்நாடுகளுக்கு இவர்கள் வாழ்நாள் முழுவதும் ஆண்டுசந்தாவாக அதிகமாக அள்ளிக் கொடுப்பதையும் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் நிகழ்த்தியும் இந்தியர்களின் கலாச்சாரத்தை சீர் கெடுத்தும் வருகின்றனர் இதனால் நம் இந்தியர்களின் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு மிகவும் குறைந்து கொண்டே வருவதுடன் பெருமளவு வீழ்ச்சி அடைவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாகும்.

அயல்நாட்டு கலாச்சாரத்தை இந்தியாவிற்குள் புகுத்திய அயல்நாடுகளின் சர்வதேச கிளப்புகளுக்கு **இந்தியாவில் முற்றுப்புள்ளி வைத்து மாற்று** கிளப்புகளை ஏற்படுத்தி மது இன்றி சேவையுடனும் ஆன்மிகத்துடனும் மதுவிற்கு பதில் மதசார்பற்ற தியானத்தை புகுத்தியும் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியர்களின் களாச்சாரத்தை பேனிக்காப்பதற்காக இந்தியாவில் எனது தலைமையில் அரசு அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது தான் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் என்னும் பன்னாட்டு சேவை கிளப்ஸ் ஆகும்.

இதில் அனைவரும் அதிக ஆரோக்கியத்துடனும், நீண்ட கால ஆயுளுடனும் வாழச்செய்யவும் இந்தியர்களுக்கும் அயல்நாட்டு மக்களுக்கும் நம் இந்தியர்களின் கலாச்சாரத்தைப் புகுத்தி அனைவரையும் நல்வழிபடுத்தி ஒற்றுமையுடன் அவர்கள் குடும்பத்தாருடன் நீண்ட கால ஆயுளுடனும் ஒற்றுமையுடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழவைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் உருவாக்கபட்டுள்ளது. இதில் உலகம் முழுவதும் உள்ள லயன்ஸ் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும் லார்ட்ஸ் உறுப்பினர்களாக மாற்றப்பட்டு நல்வழியில் மாற்றத்தை ஏற்படுத்தி அனைவரும் பயனடைந்து நீண்ட ஆயுளுடன் நீடுழி வாழையடி வாழையாய் வாழச்செய்து ஏழை எளிய பொதுமக்களுக்கு அனைத்துவகையான பொதுசேவைகளையும் அறம் செய்திடவேண்டியும் இந்தியர்களின் அனைவரது பொருளாதாரத்தையும் வளர்ச்சியடையச் செய்திடவேண்டும் என்றும் இருகரங்கள் கூப்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன் என்று உலகமெங்கும் உள்ள அமெரிக்காவைச் சார்ந்த லயன்ஸ் கிளப்ஸ் உறுப்பினர்களுக்கும் மற்றும் யு.கே. வை சார்ந்த ரோட்டரி கிளப்ஸ் உறுப்பினர்களுகள் அனைவருக்கும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உலக தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் உருவாக்கி தொண்டு செய்து வரும் இவரது லார்ட்ஸ் கிளப்ஸ்களில் உலகெங்கும் உள்ள அனைவரும் இணைந்து பயனடைந்திட வேண்டுமாய் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார்.




LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359 / 2013
We Serve
Lords மா.பால்ராஜ்
Founder & International President
LORDS CLUBS INTERNATIONAL

- Economic development
- Education Service
- Friendship
- Health service
- Human rights
- Leadership
- Political Service
- Social service
- Spirituality

For Membership Call
98 4055 9673

LORDS CLUBS INTERNATIONAL
Email : lordsclubsinternational@gmail.com
Web : www.lordsclubs.com




# LORDS Ma. PAUL RAJ, Founder & INTERNATIONAL PRESIDENT OF LORDS CLUBS INTERNATIONAL, IS ONE OF THE MOST SUCCESSFUL SOCIAL SERVICE PROVIDERS IN THE WORLD

International social workers help individuals, families, groups, neighborhoods, and communities around the world overcome the challenges they face, such as poverty, substance abuse, or even after a natural disaster.

However, finding international social work positions can be difficult because organizations need candidates that can help people overcome the specific obstacles facing citizens around the world.

Continue reading to find out about the regions that need social workers, a list of issues facing their citizens, and some organizations you could work for.
What Is International Social Work?

Social workers are committed to making a difference in the lives of people within communities. Therefore, international social workers diligently strive to ease suffering and better the lives of people in need around the world.
But that doesn't mean social workers do all of the work themselves.
Instead, social work is about helping those in need to discover new and innovative ways to resolve or cope with the challenges they face. That way, their clients have the skills, knowledge, and empowerment to improve their circumstances and overall life.

Lords Paul Raj, Founder & International President of Lord's Clubs International, is one of the most successful social service providers in the world.